மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Victims involved in accidents.

* 93 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the amount disbursed to victims involved in accidents, viz., (1) employees and (2) third parties by the State Transport Department during 1969–70–71 ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

ஆண்டு.	தொழிலாளர் இழப்பீட்டுத் தொகையாகப் பணியாளர்களுக்குக் கொடுத்த தொகை:	நீதிமன்றங்கள் மூலம் மூன்றாம் நபர்களுக்கு வழங்கிய தொகை.	பேச்சுவார்த்தைகள் மூலம் செலுத்தப் பட்ட தொகை.
(1)	(2)	(3)	(4)
1969–70	இல்லை	2,35,323·25	13,080·16
1970–71	15,000.00	7,82,431·61	5,954·46

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த மாதிரித் தொகை கொடுக்கும்போது இன்ஷூரன்ஸ் செய்வதன் மூலம் தொகை கொடுக்க ஏற்பாடு செய்தால் குறைவாக இருக்குமா? இதிலே எந்த முறை லாபகரமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

State Transport Central Workshop at Chromepet.

* 94 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there was any fire accident in the State Transport Central Workshop at Chromepet about the 5th June 1971; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) குரோம்பேட்டையில் அரசுப் போக்குவரத்துத் துறையின் மத்தியப் பணிக்களரியின் உதிரிப்பாகங்கள் பண்டகசாலைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உதவாக்கெட்ட வண்டிகளில் ஒன்று 5—6—1971 அன்று காலை சுமார் 10-49 மணிக்குத் தீப்பிடித்துக் கொண்டது. அதற்கு அருகில் இருந்த மற்றொரு வண்டிக்கும் அத்தீ பாவியது. இரண்டு வண்டிகளும் சேதமடைந்தன. தீயணைப்புப் படையின் உதவியால் காலை சுமார் 11-15 மணிக்குத் தீ முழுவதும் அணைக்கப்பட்டது.